கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,17 86,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி வளர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின்கீழ் ரூ. 27,21,77,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 12-3-1984 காலை 10-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-32 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

125. கோயம்புத்தூர் மற்றும் குன்னூரில் உள்ள ஏலம்விடும் மையங்களில் விற்கப்படும் தேயிலைக்கு விதிக்கப்படும் விற்பனை வரியை ஆறு சதவீதத்திலிருந்து இரண்டு சதவீதமாக குறைப்பது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 14-12-1983 ஆம் நாளிட்ட 1416 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை]தமிழ்நாடு 1956 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் I/1956) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

126. 4-3-1979 முதல் 23-3-1979 வரை தேங்காய்கள் கொள்முதல் செய்த எந்த ஒரு வணிகரும் செலுத்தும் வரியினை தள்ளி வைத்தல் குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 17-12-1983 ஆம் நாளிட்ட 1433 ஆம் எண்

அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, [தமிழ்நாடு 1956 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1956) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

127. தமிழ்நாடு 1953 ஆம் ஆண்டு விளம்பர வரி விதிகளை குறைப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 22-11-1983 ஆம் நாளிட்ட 1354 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1983) 7 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

128. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான பதினோராவது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

129. தமிழ்நாடு முதல் அமைச்சர், அமைச்சர்கள், அரசு ஊழியர்கள் ஆகியோர் மீது சாராயம், இந்தியாவில் தயாரிக்கப் படும் அயல்நாட்டு மதுவகைகள் ஆகியவற்றின் உற்பத்தி, மொத்த விநியோகம் சில்லரை விநியோகம் ஆகியவைகளுக்கான உரிமை மற்றும் உரிமம் வழங்குவது மற்றும் இவை தொடர்பான பொருள்கள் சம்பந்தமான சாட்டுரைகளை விசாரிக்க அமைக்கப் பட்ட நீதிபதி திரு டி. இராமபிரசாத்ராவ் விசாரணைக் குழுவின் அறிக்கையின் முடிவுகள் (ஆங்கிலம்.)

130. நீதிபதி திரு டி. இராமபிரசாத்ராவ் விசாரணைக் குழுவின் அறிக்கை ஏற்கப்பட்டது குறித்து 15-3 1984 ஆம் நாளிட்ட மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 330 ஆம் எண் அரசாணையின் நகல்.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

53. தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85 (தமிழ், ஆங்கிலம்).

54. வேலை வாய்ப்பு—பயிற்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85 (29 ஆம் எண் மானியக் கோரிக்கையின் துணை மானியக் கோரிக்கை). (தமிழ், ஆங்கிலம்).

55. ''தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் பணிகள்'' குறித்த சிறு புத்தகம்.

56. தமிழ்நாட்டில் நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85.